**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**
**CASE NO.SC.352 /2023**

**Deposition of P.W.** 1

Name : பாலன்

S/o, D/o, W/o : கபிரியேல்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated:24.09.2025**

**Accused** Present.

<u>முதல் விசாரணை</u>–

நான் குலசேகரம், அரியம்பகோட்டில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். ஆஜர் எதிரி எனது மகனின் நண்பர். 12.12.2021ம் தேதி 07.15 மணிக்கு எதிரி எனது வீட்டிற்கு வந்தார் அப்போது எனது மகன் வீட்டில் இருந்தார். எனது மகன் உறங்கி கொண்டிருந்தார். என் மகனை பார்க்க ஏன் வந்துள்ளாய் என்று கேட்டேன் எதிரி என்னை தேவிடியா, பிண்டாமோனே என்று அசீங்கமாக பேசி செங்கலை எடுத்து எனது இடது கன்னத்தில் அடித்து விட்டார். எனது மகன் எதிரியை சமாதானப்படுத்தி அழைத்து சென்று விட்டார். 13.12.2021ம் தேதி காலை 05.30 மணிக்கு நான் விவாசயத்திற்கு சென்று விட்டேன். எதிரி என்னை வீட்டில் சென்று விசாரித்துள்ளார். என் மனைவி ஏன் வந்தாய் என்று கேட்டதற்கு அவரை கெட்ட வார்த்தை

பேசியுள்ளார். என் மகன் 08.00 மணிக்கு மேல் செல்போனை வாங்கிவிட்டு வருவதாக சென்றுள்ளார். 01.15 மணிக்கு என் அக்கா பபி கிளாடிஸ் –க்கு போண் மூலம் சுரேன் ராஜால் எனக்குஅவமானம் தாங்க முடியவில்லை. வெளியே செல்லமுடியவில்லை என்றும் எனவே நான் சாக போகிறேன் என்று கூறியுள்ளார். எனது மகளிடம் செல்போணில் அதை பதிவு செய்ய சொல்லியுள்ளார். 14ம் தேதி காலையில் எனது மகன் ரப்பர் தோட்டத்தில் இறந்து கிடப்பதாக பால்வெட்டும் நெல்சன் என்பவர் வீட்டில் வந்து சொன்னார். நான் சென்று பார்த்தேன். எதிரி என்னையும், என் மனைவியையும் அடித்து அசீங்கமாக பேசியதால் எனது மகன் தற்கொலை செய்து கொண்டார். என் மனைவி போலீசிடம் புகார் கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அந்த புகார்அ.சா.ஆ.1. அந்த கையொப்பத்தை எப்போது போட்டுகொடுத்தேன் என்று ஞாபகமில்லை. புகார்மனுவை நான் தான் காவல்நிலையத்தில் கொடுத்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை,</u>**

எதிரியும், என் மகனும் பல வருடங்களாக நண்பர்கள் என்றால் சரிதான் இருவரும் ஒருவருக்கு ஒருவர் அவர்களது வீட்டிற்கு சென்று வருவது வழக்கம் தான். எனது மகனின் பிறந்த தேதி எனக்குத் தெரியாது. வள்ளியூரில் வைத்து பிறந்தார். எனது கொழுந்தியாருக்கு பிறந்தார். ஸ்டாலின் எனது சொந்த மகன் இல்லை என்றால் சொந்த மகனாக பாவித்து வருகிறேன். என் இடது கன்னத்தில் பட்ட காயத்தை நான் போலீசாரிடம் காட்டவில்லை. நான் சிகிச்சை எடுக்க மருத்துவமனைக்கும்

செல்லவில்லை. நான் படிக்கவில்லை. நான் கையெழுத்து போட்டு கொடுத்த பேப்பரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்குத் தெரியாது. 12ம் தேதி பிரச்சனை நடந்ததாக சொன்ன பிறகு இருவரும் சேர்ந்து தான் வெளியே சென்றார்கள். காலை 08.00 மணிக்கு பிறகு என் மகன் வீட்டிற்கு வரவில்லை. என் மகன், மகளிடம் போணில் பேசுவதை பதிவு செய்ய சொன்ன விபரத்தை போலீசாரிடம் சொன்னேன். என் மகன் இறந்து கிடந்த இடத்திற்கும், எங்கள் வீட்டிற்கும் இடையே 3 கி.மீ தூரம் இருக்கும். என் மகன் இறந்து கிடந்த இடத்திற்கு செல்லும் போது 05.00 மணி இருக்கும். நான் செல்லும்போது என் மகன் இறந்து கிடந்த இடத்தில் போலீசார் இல்லை. போலீசார் எவ்வளவு நேரத்தில் வந்தார்கள் என்று ஞாபகமில்லை. 06.00 மணிக்கு பிரேதத்தை எடுத்து சென்று விட்டோம். பிரேதத்தை எடுப்பதற்கு முன்னர் போலீசாருக்கு தகவல் சொன்னோம். அப்போது போலீசாரும் வந்து விட்டார்கள். என் மகன் இறக்கும் போது என் மகள் வெளியூரில் இருந்தாள். இறந்த அன்று சாயங்காலம் 07.00 மணிக்கு என் மகள் வந்தாள். என் மகன் வந்த பிறகு என் மகன் மகளிடம் சொன்ன விபரங்களை எங்களிடம் கூறினார் என்றால் சரியல்ல. அதற்கு முன்னரே போண் மூலம் என்னிடம் கூறினார். 13ம் தேதி 01.15 மணிக்கு என் மகள் அந்த விபரத்தை என்னிடம் கூறினார். என் மகள், என் மனைவியிடம் சொல்லியுள்ளார். வயலுக்கு சென்று விட்டு 5, 6 மணிக்கு வந்த போது என்னிடம் சொன்னார். என் மகனை தேடி 2, 3 மலைகளுக்கு போனேன். என்னுடன் 4, 5 பையன்மார்கள் வந்தார்கள். சந்திரன், ஐயப்பன், வேலுதாஸ், மேலும் 2 பேர் என்னுடன் வந்தார்கள். இரவு 08.00 மணி வரை தேடினோம். பிரேத பரிசோதனைக்காக ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனைக்கு

கொண்டு போனார்கள். என் மகன் பிரேதத்துடன் நான் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையில் தான் இருந்தேன் என்றால் சரியல்ல. நான் செல்லவில்லை. நான் வீட்டில் இருந்தேன். போலீசார்என் வீட்டிற்கு வந்தார்கள். வீட்டில் வைத்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் இல்லை. வீட்டில் வைத்து போலீசார் என்னை விசாரிக்கவில்லை. மாலை 08.00 மணிக்கு மேல் அடக்கம் நடந்தது. அடக்கம் முடிந்த பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நானும் அடக்கம் முடிந்த பிறகு காவல்நிலையம் செல்லவில்லை. சொத்துக்களை என் மகள் பேரில் எழுதி வைத்தேன் என்றால் இல்லை. வீடு என் பெயரில் தான் உள்ளது. என் மகனுக்கு குடிப்பழக்கம் உண்டா என்று எனக்குத் தெரியாது. எனக்கு குடிப்பழக்கம் உண்டு. எனக்கும். என் மகனுக்கும் அவ்வப்போது பிரச்சனை வரும் என்றால் சரியல்ல. இறந்தவர் சொந்த மகன் இல்லாததால் சொத்துக்களை மகளுக்கு கொடுப்பதற்காக மகனை தாறுமாறாக பேசுவேன் என்றால் சரியல்ல. என் மகள் 10ம் வகுப்பு வரை படித்துள்ளாள்.இறந்து போன மகன் 7ம் வகுப்பு வரை படித்துள்ளான். நான் என் மகனை தேவையில்லாமல் திட்டியதால் மனஉளைச்சல் காரணமாக இறந்து விட்டார் என்றால் சரியல்ல. எனது மகன் மறைவிற்கு எதிரி காரணமல்ல என்றால் சரியல்ல. என்மகன் இறப்பதற்கு முன்னர் 2 முறை தற்கொலைக்கு முயற்சி செய்தார் என்றால் சரியல்ல.

**Deposition of P.W.**2

Name : தங்கம்

S/o, D/o, W/o : பாலன்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:24**.09.2025**

**Accused** Present.

<u>முதல் விசாரணை</u>–

நான் குலசேகரத்தில் வசித்து வருகிறேன். வீட்டு வேலைகளை பார்த்து வருகிறேன். அ.சா.1 என் கணவர். இறந்து போன ஸ்டான்லி எனது மகன். ஆஜர் எதிரியை தெரியும். ஆஜர் எதிரி எனது மகனின் நண்பர். 02.02.2021ம் தேதி எதிரி என் கணவரை கல்லால் இடது கன்னத்தில் அடித்தார்.மேலும் அசீங்கமாக பேசினார். வீட்டின் மீதும் கல்லை கொண்டு எறிந்தார். என் மகன் இருந்த இடத்திலும் கல்லை கொண்டு எறிந்தார். கம்பியை எடுத்து வந்து வீட்டிற்குள் போட்டார். நிறைய கெட்டவார்த்தைகள் பேசினார். என் மகன் எதிரியை அழைத்து சென்றார். இரவு முழுவதும் என் மகன் வீட்டிற்கு வரவில்லை. மறுநாள் காலை 05.30 மணிக்கு வீட்டிற்கு வந்தார். காபி கொடுத்தேன். காபி குடிக்க முடியவில்லை என்றும், என்னை எதிரி விரட்டியதால் நான் வீட்டிற்கு



வரவில்லை என்று சொன்னார். மேலும் எதிரி என் மகனின் துணியை உருவியதாக சொன்னார். அதனால் என் மகனுக்கு கேவலம் பொறுக்க

முடியவில்லை. இது சம்மந்தமாக புகார் கொடுக்க சொன்னார். எனக்கு உடல்நிலை சரியில்லாததால் புகார் கொடுக்கவில்லை. என் கணவர் அது சம்மந்தமாக புகார் கொடுத்தார். எதிரி செய்த குற்றங்கள் பொறுக்க முடியாததால் விஷம் குடிக்க போவதாக அக்காவிடம் தெரிவித்துள்ளான். என்னையும், என் பிள்ளையையும் அசிங்கமாக பேசியதால் வீட்டை விட்டு சென்று விட்டார். செல்போனை எடுக்க செல்வதாக கூறிவிட்டு சென்றார். அவனது அக்காவிற்கு போண் செய்து விஷம் குடிப்பதாக சொன்னார். நாங்கள் என் மகனை தேடினோம். மறுநாள் காலை 03.00 மணிக்கு காட்டில் இறந்ததாக சொன்னார்கள். போலீசில் புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

என் மகளும், எதிரியும் நண்பர்கள் என்றால் சரிதான். என் மகன் அவர் வீட்டிற்கும், அவர் எங்கள் வீட்டிற்கும் வருவார் என்றால் சரிதான். போலீசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள். என்னை வீட்டில் வைத்து தான் விசாரித்தார்கள். நான் மருத்துவமனைக்கும், காவல்நிலையத்திற்கும் செல்லவில்லை என்றால் காவல்நிலையத்திற்கு போனேன். போலீசார் என்னை விசாரிக்கும் போது எதிரி என் மகனை விரட்டியது குறித்தும், துணியை உருவியது குறித்தும் சொல்லவில்லை. என் கணவர் உடனடியாக புகார் கொடுத்தார் என்றால் சரிதான். என் கணவர் புகார் கொடுக்கும் போது என் மகன் வீட்டில் தான் இருந்தார். என் மகள் , என் மகன் இறந்த அன்று மதியத்திற்கு மேல் வந்தார். அதிகாலை



02.00 மணிக்கு என் மகளுக்கு போண் செய்து விட்டு 03.00 மணிக்கு இறந்து விட்டார். என்மகன் இறந்த விபரத்தை போலீசாருக்கு உடனடியாக சொல்லி விட்டோம். நான் என் மகன் இறந்த இடத்திற்கு செல்லவில்லை.

என் கணவரும், ஊர்காரர்களும் போனார்கள். போலீசாருக்கு உடனடியாக தகவல் சொல்லி விட்டார்கள். போலீசார் வந்து பார்த்து விட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தார்கள். போலீசார் என் மகன் இறந்த அன்று மதியத்திற்கு மேல் என்னை விசாரித்தார்கள். நான் நீதிமன்றத்தில் சொன்ன விபரங்களை போலீசாரிடம் சொல்லவில்லை. அடக்கம் முடிந்த பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. என் மகன் இறந்து ஒருவாரத்திற்குள் போலீசார் என்னை விசாரிக்க கூப்பிட்டார்கள். என் மகன் மலையில் இறந்து கிடந்தார். ரோட்டிலிருந்து சானலை தாண்டி பல மீட்டர் துாரத்தில் மலையில் இறந்து கிடந்தார் என்றால் சரிதான். என் மகன், மகளிடம் பேசிய விபரங்களை என் மகள், மகன் இறந்ததை வந்து பார்த்த பிறகு தான் சொன்னார். என் மகனுக்கு குடிப்பழக்கம் உண்டு. எங்கள் வீட்டில் என் கணவருக்கும், மகனுக்கும் அடிக்கடி சண்டை நடக்கும் என்றால் சரியல்ல. வீட்டை என் கணவர் மகளுக்கு எழுதி வைத்து விட்டார் என்றால் சரியல்ல. இறந்தவர் எனது சொந்தமகன் இல்லாததால் சொத்துக்களை மகளுக்கு கொடுப்பதற்காக அவரை தரக்குறைவாக பேசியதால் மனஉளைச்சலில் என் மகன் தற்கொலை செய்து கொண்டார் என்றால் சரியல்ல. எதிரி கல்லால் எறிந்ததால் வீட்டிற்கு சேதாரம் இல்லை. பொய் வழக்கு என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC.352 /2023**

**Deposition of P.W.** 3

Name : சிவிலிக்

S/o, D/o, W/o : பகர்தீன்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**24.09.2025**

**Accused Present.**

<u>முதல் விசாரணை</u>–

நான் அரசுமூட்டில் வசித்து வருகிறேன். இறைச்சி கடை வைத்துள்ளேன். அ.சா.1ஐ தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். இறந்துபோன ஸ்டேன்லியும் தெரியும். வழக்கு சம்பவம் பற்றி எனக்குத் தெரியாது போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதிக்க கோரி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>–**

ஆஜர் எதிரி அ.சா.1யையும், அவரது மனைவியையும் இறந்துபோன ஸ்டேன்லி என்பவரையும் அசிங்கமாக பேசி மனஉளைச்சலை ஏற்படுத்தியதால் ஸ்டேன்லி விஷம் குடித்து இறந்து விட்டார் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது அரசு தரப்பிற்கு விரோதமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>–**

எதிரிகள் தரப்பில் சாட்சியிடம் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டது.